[1973 நவம்பர் 22

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU V. ISVARMURTI : Mr. Chairman, Sir, I would like to know whether the Government have decided to extend the research activities of the Agricultural University throughout the State and, if so, the details of the decision.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Mr. Chairman, Sir, the question is about production of peat-based rhizobia. But, if a question is asked about extending the research throughout the State, then I will have to hazard an answer. I would, therefore, request the hon. Member to put a separate question on the research throughout the State. If any question is put regarding the production of peat-based rhizobia, I am prepared to answer.

Attack on the Veterinary Doctor, Ramanathapuram

* 50. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that a Veterinary Doctor, who took charge at Ramanathapuram recently, was bound and belaboured by the office staff during June this year ;

(b) if so, the reasons therefor; and

(c) the action taken thereon ?

இராமநாதபுரம், கால்நடை மருத்துவ அதிகாரிமீது தாக்குதல்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இவ்வாண்டு ஜூன் மாதத்தில், இராமநாதபுரம் கால்நடை மருத்துவ அதிகாரியாக அண்மையில் பொறுப்பேற்ற ஒருவரை அவ்வலுவலக ஊழியர்கள் கட்டி வைத்து அடித்தனரா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?

(உ) அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

@ 224-ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 நவம்பர் 22]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தஞர் : (அ) அவ்வாறு ஒரு புகார் கிடைத்தது.

(இ) & (உ) புகாரை காவல் துறையினர் புலன் விசாரித்து வருகிருர்கள். தாக்குதலில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் கால்நடை உதவியாளர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்த மருத்துவ அதிகாரியை அந்த அலுவலக ஊழியர்கள் எதற்காகக் கட்டி வைத்து அடித்தனர் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தஞர் : தலைவரவர்களே, அந்த அதி காரியை அடித்தார்களா, இல்லையா, அடித்திருந்தால் அதற்கு என்ன காரணம் என்பதெல்லாம் புலன் விசாரணையில் இருந்து வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இது கிட்டத்தட்ட 6—6—1973-க்கு முன்னு லேயே நடந்த நிகழ்ச்சி. புலன் விசாரணைக்குக் கொடுத்து ஐந்தாறு மாதங்கள் ஆகிவிட்டன. இந்தக் காலத்திற்குள் அவரை எதற்காக அடித்தார்கள், எந்தக் காரணத்திற்காக அடித்தார்கள் என்பதைக் கூடவா சொல்லக்கூடாது? இதுவுமா புலன் விசாரணையில் தெரியவேண்டும். இந்த விவரம் தெரியக்கூட ஐந்து மாதங்கள் வேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தஞர் : தலைவரவர்களே, புலன் விசாரணை முடிந்த பிறகுதான், காரணங்கள் தெரியும். அந்த நிகழ்ச்சி என்ன காரணத் திற்காக, என்ன தன்மையில் நடந்தது என்பதைப்பற்றியெல்லாம் புலன் விசாரணை முடிந்த பிறகுதான் கூறலாமே தவிர, இதற்கிடையிலே இன்னின்ன காரணங்கள் என்று நாம் சொல்லக்கூடாது. இப்போது சொல்லிவிட்டால், மேற்கொண்டு புலன் விசாரணையில் சொல்லும் காரணங்களில் மாற்றமிருந் தால், தவறு என்று திரும்பச் சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே புலன் விசாரணை முடிந்த பிறகு, இதற்கான காரணங்கள் தெரியக்கூடும்.

திரு. சா. கணேசன் : தலைவரவர்களே, காரணங்களைப்பற்றி அவசிய மில்லை. இந்த நிகழ்ச்சி நடந்ததா இல்லையா என்பதாவது அரசுக்குத் தெரிந் திருக்கும். அதையாவது அரசு சொல்லக்கூடாதா என்று தலைவரவர்களின் மூலமாக கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தஞர் : தலைவரவர்களே, நான் சொன்ன பதில், அவ்வாறு ஒரு புகார் கிடைத்திருக்கிறது என்று. அந்தப் புகாரிலே உண்மையிருக்கின்றதா, அது உண்மையில்லையா என்பதெல்லாம் விசாரணை முடிந்த பிறகுதான் தெரியவரும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அவரை எதற்காகக் கட்டி வைத்து அடித்தார்கள் என்று அந்தப் புகாரிலே சொல்லப்பட வில்லையா ? அந்தப் புகாரில் என்னதான் சொல்லப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அந்தப் புகாரிலே எந்தவிதமான காரணமும் சொல்லவில்லை. அதில் காரணம் எதும் காணவில்லை. அடிபட்டவரே 10 பேர்களைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார். இதுதான் காரணம் என்று சொல்லவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்த அதிகாரியே புகார் கொடுத்திருக்கிறார். அந்த அதிகாரியை எதற்காகக் கட்டிவைத்து அடித்தார்கள் என்று புகாரிலேயே சொல்லாதபோது, அதை எப்படிப் புகாராக எடுத்துக்கொள்ள முடியும்? புகாரில் இன்னின்ன காரணங்களுக்காக என்று சொல்லாவிட்டால், அதை எப்படிப் புகார் என்று சொல்ல முடியும் என்றுதான் நான் கேட்கின்றேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அவரைக் கட்டிவைத்து அடித்ததாக புகாரில் சொல்லியிருக்கின்றார்கள். அவருக்குக் கீழ் இருக்கின்ற ஊழியர்களை, அதிகாரிகளைப்பற்றி இப்படிப்பட்ட புகார் சொல்லியிருக்கின்றார்கள். அவ்வளவுதான் அதிலிருக்கின்றது. மேற்கொண்டு விசாரணை முடிந்த பிறகுதான் சொல்ல முடியும்.

Television Broadcasting Station

* 51. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the towns in the State where television broadcasting stations are proposed to be located ?

தொலைக்காட்சி ஒலிபரப்பு நிலையம்.

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில், தொலைக் காட்சி ஒலிபரப்பு நிலையங்கள் அமைக்கக் கருதியுள்ள நகரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சென்னை மாநகரில் தொலைக்காட்சி நிலையம் ஒன்று அமைய உள்ளது.